# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 22.07.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

நான் கடந்த ஜுமுஆ குத்பாவில் ஜல்ஸாவிற்கு வரக்கூடிய விருந்தினர்களுடன் மதிப்பு மரியாதையுடன் விருந்தோம்பல் செய்வது சிறந்த பண்பாகும் என விருந்து உபசரிப்பவர்களிடமும், பிற பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களிடமும் கூறியிருந்தேன். ஜல்ஸாவுடைய இந்த நாட்களில் ஒவ்வொரு பணியாளரும், அவர் எந்த பிரிவின் கீழ் பணியாற்றுபவராக இருந்தாலும் சரி, இந்த சிறந்த பண்பு, செயல்கள் அவரின் மூலமாக வெளிப்பட வேண்டும்.

இன்று மீண்டும் இதனைப் பற்றி சில விஷயங்களைக் கூறுவேன். ஆனால் இன்று விருந்தினர்களின் பொறுப்பு மற்றும் ஒரு நம்பிக்கையாளர் எவ்வாறு விருந்தினராக இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் கூறுவேன்.

இதனைத் தொடர்ந்து எனது வழக்கத்திற்கேற்ப ஜல்ஸா ஏற்பாடுகள் தொடர்பான சில விஷயங்களைப் பற்றியும் கூறுவேன். எனவே இதனைப் பற்றியும் ஞாபகமூட்டப்படும். மேலும் இது மிகவும் முக்கியமான ஒன்றாகும். பழைய நடைமுறைக்கேற்ப வழிகாட்டல்களும், ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் ஒட்டப்பட்டிருக்கும். இருந்தாலும் மக்கள் அதனை படிப்பதன் பக்கம் மிக குறைந்த கவனம் செலுத்துகின்றார்கள் என்பது அனுபவம் மூலம் தெரிய வருகிறது. அதனை முக்கியமானதாக கருதுவதும் இல்லை. மேலும் ஞாபகமூட்டுவது நன்மை பயக்கக்கூடிய விஷயமாகும். அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கையாளருக்கு அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கட்டளையின் அடிப்படையில் அறிவுரை கூறும்போது அது நிச்சயமாக அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் பலன்தரக்கூடியதாகவும் இருக்கிறது. மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு காலத்தின் இமாம் மற்றும் ரஸூல் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்ட ஜமாஅத் என்ற சிறப்பும் இருக்கிறது.

மேலும் இது அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் கட்டளையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. இன்று உலகில் அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்ட கிலாஃபத் அமைப்புடன் இணைந்துள்ள பெருமை அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மட்டுமே இருக்கிறது. ஆக ஜமாஅத் சகோதரர்களுக்கு அறிவுரை கூறும்போது அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களுடைய கூற்றின் அடிப்படையில் அறிவுரை கூறும்போது, அவர்கள் குறிப்பாக அதனை செய்ய முயற்சி செய்வார்கள்; முயற்சி செய்யவும் வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் நமக்கும் மற்றவர்களுக்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. நாம் ஒரு கை அசைவில் உட்கார்பவர்களும் எழுபவர்களும் ஆவோம். இந்த குத்பாவில் கூறக்கூடிய மக்களாக உங்களை அல்லாஹ் ஆக்குவானாக. மேலும் இந்த ஜல்ஸாவில் நானும் மற்ற சொற்பொழிவாளர்களும் கொடுக்கக்கூடிய அறிவு, ஆன்மீகம் மற்றும் தர்பிய்யத் சம்பந்தமான உரைகளைக் கேட்டு இங்கும், உங்களது வீடுகளுக்குச் சென்ற பிறகும் அமல் செய்பவர்களாக நீங்கள் இருக்க வேண்டும்.

கடந்த ஜுமுஆவில் ஒரு ஹதீஸின் அடிப்படையில் விருந்து உபசரிப்பாளருக்கும் பணியாளர்களுக்கும் அறிவுரை கூறியிருந்தேன். அதாவது அல்லாஹ் மற்றும் மறுமையின் மீது நம்பிக்கை கொண்டுள்ள ஒரு நம்பிக்கையளர் தன்னுடைய விருந்தினருக்கு கண்ணியமளிப்பதும் மதிப்பு மரியாதை செய்வதும் கடமை ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு மூன்று நாள் மூன்று இரவு வரை என்று கூறி விருந்தினர்களுக்கும் கவனமூட்டப்பட்டுள்ளது. விருந்து உபசரிப்பவர் தனது விருந்தினர்க்கு கண்ணியத்துடன் விருந்தோம்பல் செய்ய வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளது. இது அந்த விருந்தினருடைய அனுமதிக்கப்பட்ட உரிமையாகும். ஆனால் விருந்தினர்களும் தன்னுடைய எல்லையைக் கவனிக்க வேண்டும். எல்லையை மீற விரும்பினால் சில சமயங்களில் விருந்தோம்பல் செய்பவருடைய நிலையில் ஒரு அமைதியின்மை வெளிப்பட்டு விடும்; இந்த ஹதீஸில் தொடர்ந்து வருகிறது. இதனை விட அதிக அளவு விருந்தோம்பல் செய்ய நாடுவது சதகாவாகும் எனக் கூறி விருந்தினரின்

உணர்வும் தூண்டி விடப்பபட்டுள்ளது. வசதிபடைத்த எவரும் ரோஷமிக்க எவரும், கண்ணியமிக்க எவரும் சதகா உணவை சாப்பிட விரும்பமாட்டார்.

மேலும் இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. விருந்தினர்கள், விருந்து உபசரிப்பவருக்கு கஷ்டம் கொடுக்கும் அளவுக்கு அதிக நாட்கள் தங்கக் கூடாது. கஷ்டம் கொடுக்கும் போது அமைதியின்மை ஏற்படுவது வெளிப்படையான ஒன்றாகும். அவ்வாறு ஏற்படவும் செய்யும். ஒவ்வொருவருக்கும் தனித்தனி நிலைமைகள் மற்றும் பிரச்சனைகள் இருக்கின்றன. ஜமாஅத் அமைப்பு இருக்கிறதென்றால் இதற்கும் சில நடைமுறைகள் இருக்கின்றன.

எனவே விருந்தோம்பல் என்பது கண்ணியம் மற்றும் கௌரவத்தை உணர்த்தக்கூடிய ஒரு பண்பு ஆகும். நமக்கிடையில் அன்பை ஏற்படுத்தக் கூடியதாகும். நேசம் மற்றும் பாசத்தை நமக்கிடையில் உருவாக்கக் கூடியதாகும். மேலும் விருந்தோம்பல் செய்பவருக்கு கஷ்டங்கள் கொடுக்கும் போது அதில் பிளவு ஏற்பட ஆரம்பமாகி விடுகிறது. ஜமாஅத் சார்பாக கூட்டமாக தங்குமிடமாக பள்ளிவாசலின் ஹால் மற்றும் வேறு சில இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் தான் தங்க வைக்க முடியும். அதன் பிறகு இவர்கள் அமைப்பின் கீழ் இருந்தவாறு நிபந்தனைக்கு உட்பட்டு செயல்படுகிறார்களா என்று அரசாங்கத்தினருடைய பார்வையும் நம்மீது இருக்கிறது. எனவே ஐரோப்பாவிற்கு வெளியிலிருந்து வரக்கூடிய விருந்தினர்கள், கவனத்தில் கொள்ள வேண்டும். ஜமாஅத் சார்பாக ஏற்படுத்தப்பட்ட தங்கும் இடங்களை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தான் பயன்படுத்த முடியும். அதிக நாட்கள் தங்க விரும்பினால் அதற்கு நீங்களே ஏதாவது ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். மேலும் அவ்வாறு செய்யும் போது விருந்தோம்பல் செய்பவரை கஷ்டப்படுத்தக் கூடாது என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றை கண்முன் நிறுத்த வேண்டும். ஒவ்வொரு விஷயத்தையும் விளக்கமாக எடுத்துரைப்பது தான் இஸ்லாத்தின் சிறப்பம்சமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சாதாரண விஷயங்களைக் கூட வெளிப்படையாக எடுத்துக்கூறி நமக்கு அனைத்து பகுதிகளிலிருந்தும் தர்பிய்யத் வழங்கி இருக்கிறார்கள். எனவே அதனை கடைபிடிப்பதே ஒரு உண்மையான நம்பிக்கையாளருடைய பணியாகும். சின்னச்சின்ன விஷயங்களிலும் கவனம் செலுத்துவது பெரிய பெரிய நன்மைகள் செய்வதன் பக்கம் கவனத்தை ஏற்படுத்தும். அவ்வாறு பெரிய பெரிய நன்மைகள் செய்வதற்கான வாய்ப்புகளும் கிடைக்கும். அப்போதுதான் அன்பு, பரிவு காட்டக்கூடிய ஒருவர் மற்றவருடைய உணர்வை புரிந்து கொள்ளக்கூடிய ஒரு சமூகம், ஒரு சூழல் உருவாகும். எனவே இதுபோன்ற விஷயங்களைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜல்ஸாக்களின் நோக்கங்களாக நமக்கு அறிவித்திருக்கிறார்கள்.

அன்பு, பாசம், சகோதரத்துவம் நிறைந்த ஒரு தொடர்பு ஏற்பட வேண்டும். மற்றும் ஒரு சூழலை உருவாக்க வேண்டும். இஸ்லாம் ஏற்படுத்த விரும்பும் அழகிய சூழல் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடைய கட்டுப்படுதலிலும், உலுல் அம்ர் மேலதிகாரிகளுக்கு கட்டுப்படுவதிலும் இருக்கிறது என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். எனவே எந்த அளவு கட்டுப்படுதலில் உயர்ந்த தரம் இருக்குமோ அல்லது கட்டுப்படுதலில் உயர் தரத்தை ஏற்படுத்திக் கொண்டே செல்வோமோ அதே அளவு விஷயங்களைக் கேட்பதற்கும் அதன்படி செயல்படுவதற்கும் கவனம் ஏற்படும்.

எனவே வந்திருக்கக்கூடிய ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் கட்டுப்படுதலின் தரத்தை மேம்படுத்த வேண்டும். இதற்காக முயற்சியும் செய்ய வேண்டும். மேலும் நமது பாதங்களைப் பின்னோக்கிச் செல்வதிலிருந்தும் தடுக்க வேண்டும். இதன் மூலம் தான் ஜல்ஸாவின் அருளிலிருந்து நாம் பலன் பெற முடியும். மேலும் சிலர் இங்கு வருகின்றார்கள். நாங்கள் ஜமாஅத் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இடங்களில் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் மட்டும்தான் தங்குவோம். அதனை விட அதிக நாட்கள் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டால் நாங்களே ஏதாவது ஏற்பாடு செய்து கொள்வோம் என்று கூறுகின்றார்கள். பொதுவாக மக்கள் பல மாதங்கள் வரை தங்குகிறார்கள் என தெரிய வருகிறது. ஏற்பாடு செய்யக்கூடியவர்களும் எரிச்சல் அடைந்து விடுகிறார்கள். மேலும் ஜமாஅத் நிகழ்ச்சிக்காக அந்த இடங்கள் தேவைப்படும் போது அந்த இடங்களிலிருந்து விருந்தினர்களை வேறு சில இடங்களுக்கு மாற்றினால் பிறகு வருத்தப்படுகின்றார்கள். என்னிடம் கூட சிலர் இதுபோன்ற குறைகளைக் கூறி வந்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட மக்களிடம் நான் வேண்டுவது என்னவென்றால், முதலில் நீங்கள் கொடுத்த அந்த

வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். ஜமாஅத் அமைப்பிற்குக் கட்டுப்படுவதை கவனத்தில் கொள்ளுங்கள். ஒவ்வொரு சின்னச்சின்ன விஷயங்களுக்கும் கூட கட்டுப்படுவது மனிதனை நன்மையின் பக்கம் அழைத்துச் செல்கிறது. இதுபோன்ற சின்னச்சின்ன விஷயங்களுக்கு எந்தவித முக்கியத்துவமும் இல்லையென்றால் அல்லது சமூகத்தில் இதன் விளைவு ஏற்படாது என்றால் அல்லது மனிதனுடைய ஒழுக்கத்தில் இதனுடைய விளைவு ஏற்படாது என்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதுபோன்ற விஷயங்களின் பக்கம் நமக்கு கவனமூட்டியிருக்கமாட்டார்கள்.

குறிப்பிட்ட காலம் வரை விருந்தோம்பல் செய்வதைப் பற்றி ஒரு ஹதீஸ் வருகிறது. இதற்கு பல விளக்கங்களும் இருக்கின்றன. இது சஹீஹ் முஸ்லிமுடைய ஹதீஸ் ஆகும். அபு ஷுரைஃப் ஹுதாய் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

விருந்தோம்பல் மூன்று நாட்கள் மட்டும் தான். அதிலும் சிறந்த கவனிப்பு ஒரு பகலும் ஒரு இரவும் தான். ஒரு முஸ்லிம் விருந்தினர் விருந்தோம்பல் செய்பவரை பாவம் செய்யக்கூடிய அளவுக்கு அங்கு தங்கக் கூடாது என்று கூறினார்கள். உடனே சஹாபாக்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம், அவர் எவ்வாறு அவரை பாவம் செய்யக்கூடியவராக ஆக்குவார் என கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் அந்த விருந்தோம்பல் செய்பவரிடம் விருந்தோம்பல் செய்வதற்கு எவ்வித வசதியில்லாத நிலை ஏற்படும் வரை அங்கு தங்குவதாகும்.

ஒருவேளை விருந்து உபசரிப்பவர் விருந்தோம்பல் செய்யவில்லையென்றால், அல்லது விருந்தோம்பலின் உரிமை ஏதாவதொரு நிபந்தனையின் காரணமாக நிறைவேற்றவில்லை என்றால் அவரை கஷ்டத்திற்கு ஆளாக்கக் கூடாது என ஹதீஸில் வருகிறது. விருந்தோம்பல் செய்பவர் தனது நல்லொழுக்கத்தின் காரணமாக கடன் வாங்கியாவது தனது கடமையை நிறைவு செய்கிறார். மேலும் தன்னை கஷ்டத்திற்கு உள்ளாக்கிக் கொள்கிறார். ஒருவேளை கடன் வாங்கும்போது செய்த வாக்குறுதியின்படி கடனை திருப்பிக் கொடுக்க முடியவில்லை என்றால் பாவம் செய்யக்கூடியவராகிறார். சில சமயங்களில் மிக நீண்ட நாட்கள் விருந்தோம்பல் செய்ய வேண்டியது ஏற்படுகிறது. விருந்தோம்பல் செய்பவர் அல்லது அவரது வீட்டினர் விருந்தினர் நமது வீட்டில் இருந்து கொண்டு போகவேமாட்டேன் என்கிறார்கள் என எரிச்சல் அடையும் நிலை மறைமுகமாக ஏற்படுகிறது. பிறகு விருந்தினருக்கு எதிராக வசைமொழி மற்றும் தகாத வார்த்தைகளைக் கூறுவதனால் பாவம் செய்யக்கூடியவராக ஆகிவிடுகின்றார். பிறகு இதன் மூலம் விருந்தினருக்கு அவருக்குரிய கண்ணியம் கிடைப்பதில்லை. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விருந்தோம்பல் செய்யாமல் பாவம் செய்யக்கூடியவராக ஆவதைப் பற்றி கூறி இருக்கின்றார்கள். விருந்தோம்பல் என்ற தலைப்பில் பல அறிவுரைகளை கூறியிருக்கிறார்கள் என்பது நமக்கு தெரிய வருகிறது. பிறகு இன்னொரு கோணத்தில் விருந்தோம்பல் செய்பவர்களுக்கு கவனமூட்டியுள்ளார்கள். அதாவது, விருந்தினரை தகுதியற்றவராகக் கருதி இந்த செயலைச் சாதாரணமாகக் கருதக்கூடாது. ஒருவேளை நீங்கள் இந்த கடமையை செய்யவில்லையென்றால் பாவி ஆகிவிடுவீர்கள். மேலும் அல்லாஹ் மற்றும் மறுமையின் மீது வைத்துள்ள உங்களது நம்பிக்கையும் வீணாகி விடும்.

மேலும் விருந்தினருக்கு விருந்தோம்பல் செய்பவரை பாவி ஆக்குவதில் உங்களுக்கும் பங்குண்டு என எச்சரிக்கை செய்துள்ளார்கள். எனவே உங்களிடமும் இதனைப் பற்றி கேட்கப்படும்.

இது வெளிப்படையில் ஒரு சாதாரண விஷயம்தான். ஆனால் இது எங்கிருந்து எங்கே சென்று விட்டது என்பதை பாருங்கள். ஒவ்வொருவரும் தனது உரிமையை நிறைவேற்றினால் விருந்து உபசரிப்பவர் பாவி ஆகவும் மாட்டார். அதேபோல் விருந்தினரும் பாவியாகவோ அல்லது பாவி ஆக்கக்கூடியவராகவோ மாட்டார். ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் மிகப்பெரிய கருணை என்னவென்றால் 99.99% மக்கள் விஷயங்களைக் கேட்கின்றார்கள். பிறகு அமல் செய்யவும் முயற்சிக்கின்றார்கள். ஆனால் ஒருசிலர் மட்டும் தான் மறுப்பு தெரிவிக்கின்றார்கள். இப்படிப்பட்ட மக்கள் மிகச்சிறந்த நல்லொழுக்க முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும். ஜமாஅத்தின் அழகினை மேலும் மெருகூட்ட முயற்சி செய்ய வேண்டும். ஒருவேளை இப்படிப்பட்ட மக்களுக்கு அறிவுரை கூறும்போது, ஒரு சில மக்களுக்காக இந்த அளவு விஷயங்களை குறிப்பிட்டுக் கூற வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? என ஒருபோதும் எண்ணக்கூடாது. மாறாக இந்த ஒரு சிலருக்கு கூறக்கூடிய அறிவுரைகளும் பலன்தரக்கூடியதாகத்தான் இருக்கிறது.

இதனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சஹாபாக்களுக்கு அறிவுரை வழங்கும் போதெல்லாம் அனைத்து சஹாபாக்களின் நிலையைக் கண்டவாறு அறிவுரை கூறவில்லை. மாறாக ஒரு சிலருடைய செயல்களைப் பார்த்து தான் அறிவுரை கூறியிருக்கிறார்கள். சஹாபாக்களில் அதிகமானோர் நன்மை மற்றும் தக்வாவின் உயர் தரத்தை அடைந்திருந்தார்கள். மாறாக முஹாஜிரீன்கள் ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வந்த போது அன்ஸார்கள் மிகச் சிறந்த முறையில் அவர்களுக்கு தொண்டாற்றினார்கள். இதுவரை இதுபோன்ற உதாரணத்தை நம்மால் காண முடிவதில்லை.

அவர்கள் எவ்வித சந்தேகமுமில்லாமல் ஒருவர் மற்றவருடன் சகோதரர்களாக மாறி விட்டார்கள். ஒரு சகோதரத்துவம் அவர்களுக்கு இடையில் ஏற்பட்டது. மேலும் வீட்டின் ஒரு உறுப்பினரைப் போன்று இருந்தார்கள் என நாம் கூறுகின்றோம். ஆனால் முஹாஜிரீன்கள் முழுமையான முறையில் தங்க ஆரம்பித்த பிறகும் கூட அன்ஸார்கள்கள் அவர்களுடன் விருந்தினர்களைப் போன்றே நடந்து கொண்டார்கள். அவர்களுடன் ஒரு உறவு ஏற்பட்டது. மேலும் அன்ஸார்களில் அதிகமானோர் தங்களுடைய உணவுகளை விட முஹாஜிரீன்களுக்கு சிறந்த உணவையே வழங்கி வந்தார்கள். ஆனால் முஹாஜிரீன்களும் சிறந்த முறையில் நடந்து கொண்டார்கள். அதாவது முஹாஜிரீன்கள் கூறினார்கள். நீங்கள் எங்களது உரிமையை இந்த அளவு கொடுக்காதீர்கள். எங்களுக்கு நீங்கள் பஜாருக்கான வழியைக் காட்டுங்கள். நாங்கள் சொந்தமாக சம்பாதித்து எங்களது பாதங்களில் நிற்கின்றோம் என்றார்கள். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது சஹாபாக்களில் அதிகமானோர் நன்மையில் நிலை நிற்பவர்களாகவும் அனைத்து விஷயங்களிலும் கவனம் செலுத்தக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். இருந்தாலும் கூட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறிவுரை கூறிக் கொண்டுதான் இருந்திருக்கின்றார்கள்.

எனவே ஒரு சிலருக்காக இந்த அளவு அறிவுரை கூற வேண்டிய தேவையில்லை என ஒருபோதும் கருதக்கூடாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது சஹாபாக்களுக்கு அவர்களுடைய தரம் குறைந்து விடக்கூடாது என்பதற்காக நிலையான உயர்ந்த நல்லொழுக்கத்தின் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். இது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் தூய்மையாக்கும் ஆற்றல் ஆகும். அதுதான் இரு புறமும் உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தக்கூடிய சஹாபாக்களை உருவாக்கியது. அதைப்போன்ற உதாரணத்தை உலகில் வேறெங்கும் காண முடியாது. மேலும் புதிதாக வரக்கூடிய விருந்தினருடைய அல்லது விருந்தோம்பல் செய்பவரின் தர்பிய்யத்திற்காக இந்த விஷயங்களை முன் நிறுத்தி அவர்களுடைய நன்மையின் தரத்தை உயர்த்துவதற்காகவும் அறிவுரை கூறப்படுகின்றது.

திருக்குர்ஆனும் ஃபஸ்தபிக்குல் கைராத் – நன்மையில் முன்னேறுவதற்கு கட்டளை இருக்கின்றது. எனவே முதலாவது, இந்த விஷயங்களின் பக்கம் கவனமூட்டுவதன் மூலம் ஒவ்வொருவருக்கும் நன்மையில் முன்னேறுவதற்கான கவனம் ஏற்படும். இரண்டாவது, நீங்கள் நன்மையில் முன்னேறுகின்றீர்கள் என்றால், உங்களது சகோதரர்கள் பின்னடைவதைக் காண்கின்றீர்கள் என்றால் அவருடைய கையைப் பிடித்து அவரையும் முன்னேறச் செய்யுங்கள். நீங்கள் நன்மையின் பிடியில் முன்னேறிச் செல்கின்றீர்கள் என்றால், நன்மையில் முன்னேறக்கூடியவர்களுடன் போட்டியிடுகின்றீர்கள் என்றால் பின்னடைந்துள்ளவர்களையும் முயற்சி செய்து மேலே கொண்டு வருவது அவசியமாகும். சமூகம் என்ற நிலையில் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும். மேலும் நம்மில் ஒவ்வொருவரும் தனது ஆற்றலுக்கேற்ப முயற்சி செய்யாத எந்தவொரு பண்பும் இருக்கக் கூடாது.

எனவே மூஃமின்கள் ஒரு ஜமாஅத்தாக இருக்கின்ற நிலையில் தான் இந்த அழகிய நிலை ஏற்படும். அறிவுரை கூறப்படும் போது சின்னச் சின்ன விஷயங்களின் பக்கம் கவனமூட்டப்படும் போது அது யாரையும் தலைகுனிய வைப்பதற்காக செய்யப்படுவது கிடையாது. அல்லது உணர்வுகளை காயப்படுத்துவதற்காக கூறப்படுவது கிடையாது. மாறாக அவர்களின் நன்மையின் தரத்தை உயர்த்துவதற்காக கூறப்படுவதாகும்.

விருந்தோம்பலைப் பற்றி கடந்த குத்பாவில் நான் கூறினேன். ஒருவருடைய கூற்றின் அடிப்படையில் ஏழைகள் வீட்டில் பருப்பை தான் சாப்பிடுகின்றார்கள். ஏழை நாடுகளில் சாப்பிடுவதற்கு சிலருக்கு பருப்பு கூட கிடைப்பதில்லை. ஆனால் பணக்காரர்கள் இறைச்சி சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். எனவே லங்கரில் பொதுமக்களுக்கென்றும் ஏழைகளுக்கென்றும் பருப்பை சமைக்க வேண்டும். அவர்களுக்கு பருப்பையே கொடுக்க வேண்டும். ஆனால் பணக்காரர்களுக்கு இறைச்சி மற்றும் சிறந்த

உணவை சமைக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த விஷயத்தைக் கேட்டு மிகவும் வெறுப்படைந்தார்கள். ஜல்ஸாவில் விருந்தினர்களுக்கென்று ஒரே விதமான உணவுதான் சமைக்கப்படும் என்றார்கள். அதே நேரத்தில் ஏழைகளுக்கும் அன்னார் அறிவுரை கூறினார்கள். இது ஷேக் முஹம்மது இஸ்மாயீல் சர்தாரி (ரலி) அவர்களின் அறிவிப்பாகும். இரண்டு மஜ்லிஸிற்கும் நான் தான் மதிய உணவு வழங்குவேன். ஒரு பகுதி புதிய விருந்தினர்களாக இருப்பார்கள். இவர்களுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சேர்ந்து சாப்பிடுவார்கள். மற்றொன்று நம்முடைய ஜமாஅத்தைச் சேர்ந்த மக்களுடையதாக இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில சமயங்களில் தமது உரையில் கூறிவந்துள்ளார்கள். பாருங்கள்! ஒருவர் ஏழையாக இருக்கிறார். அவர் தனது வீட்டில் எப்போதும் ரொட்டியும் பருப்பும் தான் சாப்பிடுவார். அவர் இங்கு வந்தும் அதே பருப்பு சாப்பிட கிடைத்தால் அதனை அவர் தவறாக எண்ணக்கூடாது. பணக்காரர்களுக்கு இறைச்சி ரொட்டி போன்றவற்றை சிறப்பாக செய்து கொடுப்பார்கள். ஏனென்றால் அவர்களுடைய வழக்கிற்கு மாற்றமான உணவு கொடுப்பதன் மூலம் அவர் நோய்வாய்ப்பட்டு விடக்கூடாது என்பதனாலாகும். அவர்களுக்கு பருப்பு மட்டும் கொடுக்கப்பட்டால் எந்த நோக்கத்திற்காக அவர்கள் வந்துள்ளார்களோ அது நிறைவேறாது. அவர்களுடைய உடல்நிலை கெட்டு விடும்.

அதனால் தான் சில சமயங்களில் இங்கும் பலவிதமான உணவுகள் சில மக்களின் உடல்நிலைக்கேற்ப சமூக மக்களுக்காக தயார் செய்யப்படுகின்றன.

எனவே சில நேரங்களில் சூழ்நிலைக்கேற்ப பலவிதமான உணவுகள் தயார் செய்ய முடிவெடுக்கும் போது எந்தப் பகுதியினரும் தவறாக எண்ணக்கூடாது. எந்த மனிதரும் தவறாக எண்ணக்கூடாது. ஆனால் பொதுவாக ஒரே விதமான உணவுதான் தயார் செய்யப்பட்டுள்ளது. நோயாளிகள், மற்ற நாடுகளைச் சேர்ந்த மக்கள் அல்லது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களுக்கும் கொஞ்சம் சிறந்த உணவுகளும் தயார் செய்யப்படுகின்றன.

ஆனால் அமைப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் தனக்கென்று சிறந்த உணவை தயார் செய்து கொள்ளக்கூடாது. நான் கடந்த குத்பாவில் கூறியது போன்று ஒரு கட்டத்தில் இந்த விஷயமும் எழுந்தது. பொறுப்பாளர் தனக்கென்று கூட உணவை தயார் செய்து கொண்டார். மேலும் விருந்தினராக வந்த ஒரு மனிதருக்கு இதைப் பற்றி தெரிய வந்ததும் அவரும் அதனை சாப்பிடுவதற்காக கேட்டார். அப்போது அவருக்கு கொடுக்கப்படவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இதுபற்றி தெரிய வந்ததும், உடனடியாக சமையல்காரர் மூலம் காடை தயார் செய்து அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நாளை அனைவருக்காகவும் காடை தயார் செய்யப்படும் என்று கூறினார்கள். மேலும் இதன் மூலம் நீதி நிலைபெற வேண்டுமென விரும்பினார்கள்.

இதனை ஒருவர் கேலியாக எடுத்து ஜல்ஸா ஏற்பாட்டாளருக்கு இவ்வாறு காடையை தயார் செய்வது உங்களுடைய கடமை என தூதுச் செய்தி அனுப்பி உள்ளார். மேலும் ஒருவேளை இதனைக் கேட்ட ஜல்ஸா ஸலானா மேலதிகாரி கவலையும் அடைந்திருப்பார். ஏனென்றால் இது அவர்களுடைய முதல் வருடமாகும். வானிலை மாற்றத்தின் அடிப்படையிலும் அவர் மிக விரைவாக கவலை அடைந்து விடுவார். அவருக்காக அதிகமாக துஆவும் செய்யுங்கள். அல்லாஹ் அவருடைய பணியில் பரக்கத்தை ஏற்படுத்துவானாக. ஜல்ஸாவின் மேலதிகாரி அவர்களே! நீங்கள் கவலை அடைய வேண்டாம். இதனை ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். விருந்தினருக்கு கண்ணியம் கொடுப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். காடைக்குப் பதிலாக பருப்பை கொடுத்தாலும் சரி அதனை கண்ணியத்துடன் வழங்குங்கள்.

**ஹஸ்ரத் மியான் அப்துல் அஸீஸ் சாஹிப் முகல் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லாஹுரில் உரை நிகழ்த்துவதற்காக வந்த நேரத்தில் 16 நாட்கள் தங்கினார்கள். உணவு ஏற்பாட்டிற்காக நியமிக்கப்பட்ட மக்களில் நானும் ஒருவனாவேன். கலியுல் நஜிபுதீன் சாஹிப், ஒரு விருந்தினரிடம் தண்ணீரையும் சேர்த்துக் குடியுங்கள் என்று கூறினார். அவர் நன்றாக சாப்பிடக் கூடியவராவார். சாப்பிட்டுக் கொண்டே இருக்கின்றீர்களே! தண்ணீரையும் குடியுங்கள் என்று கூறியிருக்கிறார். இந்த விஷயம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சென்றடைந்தது.

விருந்தினர்கள் கஷ்டத்திற்குள்ளாக்கப்படுகிறார்கள்; அவர்களுக்கு தேவையான உணவு கொடுக்கப்படுவதில்லை எனக் கூறப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் வெளியில் வந்தார்கள். வாசலில் நின்றவாறு ஏற்பாட்டாளர்கள் யார்? என வினவினார்கள். நாங்கள்தான் என சிலர் வந்தனர். ஹுஸுர் (அலை) அவர்கள், விருந்தினர்களுக்கு உணவு நல்ல முறையில் கிடைப்பதில்லை என நான் கேள்விப்பட்டேன். மேலும் பஜாருக்குச் சென்று சாப்பிடுங்கள் என கூறப்பட்டதாகவும் நான் கேள்விப்பட்டேன். இது உண்மையான என வினவினார்கள்? அதற்கு யாரோ வேண்டுமென்றே கூறியுள்ளார்கள்; ஏற்பாடெல்லாம் சரியாகத்தான் உள்ளது என்று பதிலளித்தார்.

ஹுஸுர் (அலை) அவர்கள் கூறினார்கள். இல்லை. இனிமேல் லங்கருடைய ஏற்பாட்டை நாமே கவனிப்போம். இவர்கள் நம்முடைய விருந்தினர்கள் ஆவார்கள். மேலும் லங்கருடைய விருந்தினர்கள் ஆவார்கள். மேலும் லங்கருடைய பொறுப்பு நம்மீது தான் இருக்கிறது எனக் கூறினார்கள். சில சகோதரர்கள் ஒன்றிணைந்து அன்னாரிடம் மன்னிப்புக் கேட்டார்கள். மேலும் இனிமேல் கவனமின்மை ஏற்படாது என வாக்குறுதி அளித்தார்கள். பிறகு ஹுஸுர் (அலை) அவர்கள் மன்னிப்பு வழங்கினார்கள். பிறகு ஜமாஅத்தின் லங்கர் தொடங்கப்பட்டது.

எனவே பணியாளர்கள் தன்னுடைய நெருங்கிய நண்பருடன் இதுபோன்று எதார்த்தமாக கூறுகின்றார்கள். ஒருவேளை அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய லங்கரின் விருந்தினராக வருகின்றார் என்றால் அவருக்கு கண்ணியம் வழங்குவது அவசியமாகும். ஒருமுறை இல்லை; பலமுறை 10, 20 முறை அவர் சாப்பிடுவதற்காக தட்டை எடுத்து வந்தாலும் சரி எதுவும் கூறாமல் அவருடைய தட்டில் குழம்பிட்டு கொடுக்க வேண்டும்.

இங்கு நான் விருந்தினர்களிடமும் கூற விரும்புவது, நீங்கள் குழம்பை வீணாக்காதீர்கள். சில சமயங்களில் நானும் பார்த்திருக்கிறேன். சிலர் தனது தட்டில் குழம்பை விட்டுச் சென்று அதனை வீணாக்கி விடுகின்றார்கள். சிலர் இறைச்சி, உருளைக்கிழங்கு குழம்பில் தனக்கு விருப்பமானவற்றை மட்டும் சாப்பிட்டு விட்டு அதாவது இறைச்சியை மட்டும் சாப்பிட்டு விட்டு கொஞ்சம் குழம்பையும் சாப்பிட்டு விட்டு உருளைக் கிழங்கை வீணாக்கி விடுகின்றார்கள். ஐரோப்பாவில் வசிக்கக்கூடிய சிலர் உருளைக் கிழங்கை சாப்பிட்டு விடுவார்கள்.

எனவே உருளைக்கிழங்கு விருப்பமல்லாதவர்களைத் தவிர மற்றவர்கள் வீணாக்கக் கூடாது. ஒருசிலர் உருளைக்கிழங்கை சாப்பிடவே மாட்டார்கள். அல்லது ஒரு சிலர் நோயின் காரணமாக சாப்பிடமாட்டார்கள். எனவே விருந்தாளிகள் தமக்கு தேவையான அளவு மட்டுமே வாங்கிச் சாப்பிட வேண்டும்; வீணாக்கக் கூடாது. எவ்வாறு இருந்தபோதிலும் விருந்தினர் மற்றும் விருந்தோம்பல் செய்பவருடைய நடைமுறைகள் தான் ஓர் அழகிய சூழலை ஏற்படுத்துகிறது.

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது பணியாளர் ஒருவரிடம் விருந்தினர் முன்பிருந்து தட்டுகளை எடுத்ததனால் கோபமடைந்தார்கள். சிலர் மெதுவாக சாப்பிடுவார்கள். அப்போது ஹுஸுர் (அலை) அவர்கள் கூறினார்கள். விருந்தினர் தானாக தட்டுகளை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறாதவரை தட்டுகளை எடுப்பது உங்களுடைய வேலை கிடையாது. அதேபோல் எங்களுடைய வேலையை நாங்கள் முடிக்க வேண்டும். எனவே வேகமாக சாப்பிடுங்கள் என்று கூறக்கூடாது.

விருந்தினர்களுக்கும் பொதுவான அறிவுரை என்னவென்றால் சாப்பிட்டவுடன் எழுந்து விடுங்கள். சாப்பிடக்கூடிய நேரம் சரி, சாப்பிட்ட பிறகு வீண் பேச்சுக்களைப் பேச ஆரம்பித்து விடாதீர்கள். எனவே இந்த அறிவுரையை அல்லாஹ் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக தெரியப்படுத்தியிருக்கின்றான். வீண் பேச்சுக்களை பேசாதீர்கள். எழுந்து விடுங்கள். இது உயரிய நல்லொழுக்கத்தின் அடிப்படையாகும். இதனை நாம் பொதுவாக நடைமுறைப்படுத்தவும் வேண்டும். வேலை செய்யக்கூடிய பணியாளர்கள் தங்களுடைய வேலைகளை முடிக்க வேண்டியுள்ளது. அவர்களும் ஓய்வு எடுக்க வேண்டியுள்ளது. அவர்களையும் விருந்தினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஜல்ஸாவுடைய மிகப்பெரிய நோக்கம் இறை தொடர்பை ஏற்படுத்துவதாகும். எனவே ஜல்ஸாவில் கலந்து கொள்ளக்கூடியவர்கள் பணியாளர்களும் விருந்தினர்களும் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தத் தொடர்பை

ஏற்படுத்துவதற்கு தனது தொழுகை மற்றும் நஃபில்களில் துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இதில்தான் நம்முடைய பிரச்சனைகளுக்கான தீர்வு இருக்கிறது. இந்த விஷயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்களுடைய முன்மாதிரி எப்படி இருந்திருக்கிறதென்றால் அவர்கள் எந்த அளவு ஆர்வத்துடனும் பேரவாவுடனும் இதில் மூழ்கியிருந்தார்கள் என்பதனைப் பற்றி ஓர் உதாரணத்தை உங்களுக்குக் கூறுகிறேன்.

நத்தேகான் சாஹிப் மகன் ஹஸ்ரத் அதா முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்கின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தின் பரக்கத்தில் ஒன்று, நான் சிறுவனாக இருந்தும் தொழுகையில் நிலைநின்றவுடன் உருக்கத்துடன் அழத் தொடங்கி விடுவேன். கண்ணீர் நிற்கவே நிற்காது. பிறகு சலாம் கொடுப்பேன் தொழுகை முடிந்து விடும்.

எனவே அல்லாஹ் தன்னுடைய அன்பிற்குரிய நபி, நபியுல்லாஹ் நபிமார்களின் போர்வையினால் போர்த்தப்பட்ட அல்லாஹ்வின் பயில்வானை சந்திப்பதற்கான வாய்ப்பினை வழங்கினான். இது என்மீது இறக்கப்பட்ட மிகப்பெரிய அருளாகும். என்னுடைய நாநா சாஹிப் அவர்கள் மஹ்தியுடைய காலம் எப்போது வரும் என ஏங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இறைவன் என்மீது அருள்புரிந்தான். அதன் மூலமாக அன்னாரை சந்திப்பதற்கான வாய்ப்பும் கிடைத்தது. அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

மேலும் ஹுஸூர் (அலை) அவர்களுடைய ஆயிரக்கணக்கான அடையாளங்களை பார்த்திருக்கின்றேன். அதன் மூலமாக அன்னாருடைய நபித்துவம் உண்மையென தெரிய வந்தது. உண்மையில் ஹுஸூர் (அலை) அவர்கள் இறைவனுடைய நபி ஆவார்கள். மேலும் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் அன்னாருடைய வாதங்களின் மீது நம்பிக்கை கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றக்கூடியவர்களாக நாம் இருக்கின்றோம்.

எனவே நமது தொழுகை மற்றும் நஃபில்களில் அதிக கவனம் தேவையுள்ளது. அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவாறு இன்றைய நாட்களில் தொழுகை மற்றும் நஃபில்களில் உருக்கத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை அளித்திருக்கிறான். இன்றைய காலத்தில் அஹ்மதிய்யத்தின் எதிரிகள் தனது எல்லையை மீறி விட்டார்கள். தனிப்பட்ட மற்றும் கூட்டுத் துஆக்கள், இறைநெருக்கம் தான் இந்த எதிர்ப்பை தடுக்கக்கூடியதாயிருக்கிறது. இன்றைய காலத்தில் இதன் பக்கம் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகும்.

மேலும் இன்னொரு விஷயத்தையும் கவனத்தில் கொள்ளுங்கள். ஜல்ஸாவிற்கு மக்கள் வருகின்றார்கள். சந்திப்புகளும் நடைபெறுகின்றன. சிலர் பல வருடங்களுக்குப் பிறகு ஒருவரையொருவர் சந்திப்பார்கள். சில சமயங்களில் புதிய மக்களையும் காண முடிகின்றது. பிறகு கொஞ்ச நேரம் உட்கார்ந்து பேச விருப்பம் ஏற்படும். இதற்காக ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு நீங்கள் கூடுங்கள். மஜ்லிஸை ஏற்படுத்திப் பேசுங்கள். ஆனால் இவ்வாறு செய்யும் போது தேவையற்ற விஷயங்களை பேசாமல் அல்லாஹ்வுடைய அருள் மற்றும் கருணை பற்றி பேசுங்கள். அல்லாஹ்வுக்கு அன்பிற்குரியவர்களாகிய இறந்தவர்களைப் பற்றியும் அவர்களுடைய நல்ல விஷயங்களைப் பற்றியும் பேச வேண்டும். சிலருக்கு புதிய உறவுகளும் இந்த ஜல்ஸாக்களில் ஏற்படுகின்றது. அதனால் சில சமயங்கள் உட்கார வேண்டியுள்ளது. குறிப்பாக பெண்கள் இதுபோன்ற விஷயங்களை இடைவெளியின் போது பேச வேண்டும். அதிலேயும் கூட்டமாக தங்குமிடமாக இருந்தாலும் சரி, இடைவெளி நேரமாக இருந்தாலும் சரி அல்லது வீடுகளாக இருந்தாலும் சரி குறிப்பிட்ட அளவுதான் பேச்சுக்கள் நடைபெற வேண்டும். சில சமயங்களில் மக்கள் இரவு முழுவதும் விழித்திருந்து பேசுகின்றார்கள். பிறகு சுபுஹ் தொழுகையை வீணாக்கி விடுகின்றார்கள்.

எனவே இரவில் நஃபில் தொழுகை மற்றும் சுபுஹ் தொழுகை வீணாகி விடக்கூடிய அளவுக்கு விழித்திருக்காதீர்கள். மாறாக, மிகச் சிறப்பான கவனத்துடன் வீட்டில் தங்கி இருந்தாலும் சரி, வேறெங்கல்லாம் தங்கியிருக்கிறீர்களோ தஹஜ்ஜுத் தொழுகை தொழ வேண்டும். அப்பொழுதுதான் நாம் ஆன்மீக சூழலிலிருந்து பலன்பெற முடியும். குறிப்பாக பெண்களுக்கு மேலும் ஒரு விஷயத்தின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இது உலகத்தில் நடைபெறும் திருவிழா கிடையாது. எனவே இதில் கலந்து கொள்ளக்கூடிய கவனம் நாம் நமது ஆன்மீக நல்லொழுக்க அறிவின் தரத்தை உயர்த்த வேண்டும். அதில் முன்னேற வேண்டும். மேலும் இந்தச் சூழலிலிருந்து முழுமையாகப் பலன் பெற வேண்டும் என்பதாக இருக்க வேண்டும்.

இந்த சிந்தனையிருந்தால் தனது உடை மற்றும் நகை அலங்காரத்தை வெளிப்படுத்தக்கூடிய பெண்கள், சாதாரண உடைகளை அணிய ஆரம்பித்து விடுவார்கள். அல்லது நாம் இங்கு வருவதன் நோக்கம் ஜல்ஸாவைக் கேட்பதுதான் என்று கருதி வருவார்கள். எனவே இதுபோன்ற சிந்தனை தான் இருக்க வேண்டும். மேலும் உடைகள் சரியான மறைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். சில பெண்களுடைய உடைகளைப் பற்றி புகார்கள் வருகின்றன. அவர்களுடைய அந்த ஆடைகளிலிருந்து அவர்கள் அஹ்மதி பெண்கள் தான் என எந்த வகையிலும் தெரிய வருவதேயில்லை. எனவே ஆடை என்பது அழகை மறைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். இதனைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்.

தக்வாவின் அடிப்படையில் சென்றவாறு நீங்கள் ஆடை அணிந்தால் அதுதான் உங்களுடைய அழகை மறைக்கக்கூடிய ஆடை ஆகும். இதைப் போன்று ஆண்களுக்கும் பெண்களுக்கும் பார்வையை தாழ்வாக வைப்பதற்கான கட்டளை இருக்கின்றது. பாதையில் செல்லும் போது தேவையில்லாமல் அங்குமிங்கும் பார்க்கக் கூடாது. இதுவும் மிகவும் முக்கியமான விஷயமாகும். இந்த சூழலில் சில இடங்களில் ஆண்களும் பெண்களும் ஒன்றாகச் செல்லக்கூடிய நிலை ஏற்படுகிறது. அந்த நேரங்களில் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு நடப்பது சமூகத்தில் கண்ணியத்தை மேம்படுத்தக் கூடியதாக இருக்கிறது. மேலும் தனது நல்லொழுக்கத்திற்கு இது மிகவும் அவசியமாக இருக்கின்றது. எனவே இதன் பக்கமும் அதிகமாக கவனம் செலுத்துங்கள்.

தற்போது அமைப்பு மற்றும் ஏற்பாடு சம்பந்தமாக சில விஷயங்களைப் பற்றி கூறுகின்றேன். உங்களுடைய பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பில் ஏற்படக்கூடிய கஷ்டத்தை மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொள்ளுங்கள். ஸ்கேனர் வழியாகச் சென்று தனது பொருட்களை பரிசோதனை செய்து கொள்வது மிகவும் அவசியமாகும். மேலும் இதில் ஏதாவதொரு தவற்றின் காரணமாக விடுபட்டு விட்டாலும் தானே முன் சென்று என்னை பரிசோதனை செய்து கொள்ளுங்கள். சில சமயங்களில் ஒருமுறை பரிசோதிக்கப்பட்டு விட்ட பிறகு அவர் வெளியில் சென்று மீண்டும் திரும்பி வருகிறார் என்றால் அவரை பரிசோதிக்கத் தேவையில்லை எனக் கருதக் கூடாது. எத்தனை தடவை வெளியே சென்றாலும் உள்ளே வரும்போதெல்லாம் அவர் பரிசோதிக்கப்பட வேண்டும். பரிசோதனை செய்யக்கூடியவர்கள் எவ்வளவு நெருக்கமான உறவினராக இருந்தாலும் சரியே, பரிசோதனை செய்வது அவரது கடமையாகும். எனவே விருந்தாளிகளும் இதில் கலந்து கொள்ளக் கூடியவர்களும் எரிச்சல் அடையக் கூடாது.

மேலும் ஆண்கள் மற்றும் பெண்கள் பகுதியில் ஸ்கேனரில் பரிசோதிப்பதில் பணியாற்றக்கூடிய ஆண், பெண் பணியாளர்களிடம் நான் கூற விரும்புவது என்னவென்றால் கண்டிப்பாக பரிசோதனை செய்யுங்கள். அதிலும் எல்லா தேவையான பரிசோதனைகளையும் முழுமையாகவும் விரைவாகவும் செய்யுங்கள். இதன் மூலமாக மக்கள் அதிக கஷ்டத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் இருக்காது. மேலும் ஜல்ஸாவும் குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பம் செய்ய ஏதுவாக இருக்கும். மக்களும் அவர்களுக்குரிய இடங்களுக்கு வருவதும் எளிமையாகி விடும். Security -ல் டியூட்டி செய்யக்கூடிய பணியாளர்களிடம் ஏற்கனவே Security பற்றி கூறியிருந்தேன். வேலி இடப்பட்டிருக்கிறதே என்று நினைத்து பாதுகாப்பில் இருப்பவர்கள் டியூட்டி செய்யாமல் இருந்து விடவேண்டாம். மாறாக எங்கெல்லாம் வேலி போடப்பட்டிருக்கிறதோ அங்கு பாதுகாப்பில் இருப்பவர்கள் டியூட்டி கொடுப்பதும் அவசியமாகும்.

மிகவும் கவனத்துடன் தனது பொறுப்பை உணர்ந்தவாறு பணியை செய்யுங்கள். கொடுக்கப்பட்ட எந்த பணியையும் சாதாணமாகக் கருதக்கூடாது. தீங்ளை ஏற்படுத்துபவர்கள் எப்படி வேண்டுமானாலும் தீங்கை ஏற்படுத்தலாம். எனவே டியூட்டி கொடுக்கக்கூடிய மக்கள் மட்டும் கிடையாது. மாறாக அனைவரும் தமது சூழலை கண்காணித்தவர்களாக இருக்க வேண்டும். நான் கூறியது போன்று இந்நாட்களை துஆவில் கழியுங்கள். தனது வசதிக்கேற்ப சதக்காவையும் கொடுங்கள். ஸ்கேனர் பற்றி நான் கூறினேன். இந்த வருடம் உள்ளே வருவதற்காக கஷ்டத்தை குறைக்க உள்ளே வருவதற்கான அதிக வழிகள் ஏற்படுத்த முயற்சிகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளது. நோயாளி மற்றும் குழந்தைகளைக் கொண்டு வரக்கூடியவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறிருந்தும் சில சமயங்களில் பல கஷ்டங்கள் வருகின்றன. அப்போது சோர்வடையவோ அல்லது கவலையடையவோ கூடாது.

உரைகளுக்கிடையில் தேவையில்லாமல் நாரே தக்பீர் சொல்லக் கூடாது. சிலருக்கு நாரே தக்பீர் சொல்வது வழக்கமாக இருக்கும். மாறாக ஜமாஅத் சார்பில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பின் கீழ் தான் நாரே தக்பீர் சொல்ல வேண்டும். நாரே தக்பீர் சொல்வது அவர்களது பொறுப்பாகும். நாரே தக்பீர் கூறப்படும் போது அதற்கு மிகவும் உணர்வுப்பூர்வமாக பதில் அளியுங்கள். சத்தம் உயர்வாக இருக்க வேண்டும். உரைகளுக்கிடையில் அங்குமிங்கும் செல்வதும் வெளியில் செல்வது முறையானதாக இருக்காது. எந்த நோக்கத்திற்காக வந்துள்ளீர்களோ அதனை அடைவதற்கு முயற்சி செய்யுங்கள். ஒவ்வொரு உரையும் உங்களுக்கு பலனளிக்கக்கூடியதாக இருக்கும். உங்களுக்கு ஏதாவது ஒரு புதிய விஷயத்தைக் கற்றுத் தரக்கூடியதாக இருக்கும்.

தூய்மையின் பக்கம் மிக அதிகமாக கவனம் செலுத்துங்கள். தனது குப்பைகளை அங்குமிங்கும் போடாதீர்கள். எங்கேயாவது கிளாஸ் அல்லது பிளேட் கிடந்தால் அதனை குப்பைத்தொட்டியில் போடுங்கள். இதைப்போன்று கழிவறை மற்றும் குளியலறையும் தூய்மையாக வைத்திருங்கள். பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி எந்த வெறுப்புமின்றி இந்தப் பணியை செய்து வருகிறார்கள். இருந்தாலும் விருந்தினர்களும் கழிவறை மற்றும் குளியலறையை தூய்மையாக வைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். சகதி காலோடு சென்றீர்கள் என்றால் அதனை தூய்மையும் செய்யுங்கள்.

தற்போது மழை நின்று விட்டது. இருந்தாலும் எப்போது வரும் என்பது தெரியாது. பூமி மிகவும் மிருதுவாக இருக்கின்றது. ஆகையால் பாதங்களில் சகதி ஒட்டிக் கொள்ளும். எனவே தூய்மையினை குறிப்பாக கையாளுங்கள். குளியலறையில் அழுக்கு இருக்கக் கூடாது. பிறகு ஜல்ஸா நடைபெறும் இடத்திற்கு வருபவர்கள் அதற்கென குறிப்பிட்ட இடத்தில் நுழையும் போது நிர்பந்தமில்லாமல் முன்னால் வந்து உட்கார வேண்டும். இதன் மூலமாக பின்னால் வருபவர்களுக்கு எந்த விதமான கஷ்டமும் இருக்காது. மேலும் பின்னால் வருபவர்கள் எங்கு இடம் கிடைக்கின்றதோ அங்கு உட்கார வேண்டும். ஒருவர் மற்றவரை தாண்டிக் கொண்டு முன்னால் வரக்கூடாது.

இதைபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சபையில் ஒருவர் மற்றவரை தாண்டிக் கொண்டு முன்னால் வந்தார். இதனைக் கண்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கோபமடைந்து அந்த சபையிலிருந்தே சென்று விட்டார்கள். முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்களிடம் இவருக்கு அறிவுரை கூறுங்கள் என்று கூறினார்கள். அவர்கள் அந்த நபருக்கு கடினமான முறையில் அறிவுரை கூறினார்கள். எனவே யாருக்கு எங்கு இடம் கிடைக்கிறதோ அங்கு உட்கார வேண்டும். முதலில் வரக்கூடியவர்கள் முன்னால் வர வேண்டும். பிறகு வரக்கூடியவர்கள் எங்கெல்லாம் இடம் கிடைக்கின்றதோ அங்கு உட்காருங்கள். பின்னால் வரக்கூடியவர்களுக்கு இடம் வேண்டும். எனவே காலியாக எந்த இடத்தையும் விடாதீர்கள். வந்து கொண்டேயிருக்க வேண்டும். காலியான இடங்களை நிரப்பிக் கொண்டே செல்ல வேண்டும்.

நான் மீண்டும் உங்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன். இந்த நாட்களில் இந்த சூழலை துஆவினால் நிரப்புங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 22.07.2011**

Translated by : **Maulavi ZIAUL HAQ Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**